சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல! மீண்டும் மொழி புரட்சியை உருவாக்காதீர்!

ஒன்றிய அரசை எச்சரித்த முதல்வருக்கு நன்றி!

சென்னை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

சென்னை, ஆக. 13- சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 12.08.2023 சனிக் கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, ஜோசப்சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார் மற்றும் பரிதி இளம்சுருதி,

மாவட்ட நிர்வாகிகள்: ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக் கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி. சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி.

பொதுக்குழு உறுப்பினர்கள்: டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், ஆர்.கலைச்செல்வி, ஏ.பி.பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், பாலமுருகன், ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி. விஜய்குமார், எம்.விநாயகம், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கு.கிருஷ்ண மூர்த்தி, ராஜா முகம்மது, பிரதீப்குமார், து.ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி பிரபாகரன் மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

தீர்மானம்:1

முத்தமிழறிஞர் வழியில், கழகத் தலைவர் பாதையில் இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்திட்ட வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அவைத்தலைவர் முனுசாமிதாஸ் அவர்களின் மறைவிற்கும், எழும்பூர் வடக்கு பகுதியை சார்ந்த மாவட்ட பிரதிநிதி பி.டி. பிரின்சிபால் அவர்களின் மறைவிற்கும் கொளத்தூர் கிழக்கு பகுதி 68-வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன் மணி அவர்களின் தந்தை திரைப்பட நடிகர் கோட்டை பெருமாள் அவர்களின் மறைவிற்கும், இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தும் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் ஆறுதலை தெரிவித்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்: 2

ஆகஸ்ட் 7, நம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு வங்கக்கரையோரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் பேரணியில் சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் திரளாக பங்கேற்ற மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகளுக்கும், சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கும், கழக செயல் வீரர்களுக்கும், முன்னோடிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்:3

இந்தி திணிப்பை தமிழ் நாட்டைத் தொடர்ந்து மேற்குவங்கம் கர்நாடகம் மற்றும் பல மாநிலங்கள் கடுமையாக எதிர்க்கின்ற நிலையில் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல இந்தி மொழியை எதிர்ப்பின்றி அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பேசியிருப்பது மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்கு கொத்தடிமையாக்கும் ஏதேச்சதிகார முயற்சி என்றுரைத்து.

தமிழ்நாட்டுக்கு வந்தால் தமிழ் தொன்மையான மொழி என்று நாக்கில் தேன் தடவுவதும்... டெல்லிக்குச் சென்றதும் மேற்சொன்னது போல நஞ்சை பரப்புவதும் பாஜகவின் பசப்பு அரசியல்.. இதைக் கேட்டு நடக்க தமிழ்நாடு ஒன்றும் தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல என்று கடுமையாக சாடி.. மீண்டும் 1965 மொழி புரட்சி காலத்தை உருவாக்கி விடாதீர்கள் என்று ஒன்றிய அரசை எச்சரித்த கழகத் தலைவரை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்:4

கழகத் தலைவர் தலைமையில் காணொளி வாயிலாக நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதன் அடிப்படையில் ஓராண்டு முழுவதும் நடத்தப்பட வேண்டிய கலைஞர் நூற்றாண்டு நிகழ்வுகளை மாவட்ட கழகமும், சார்பு அணிகளும் தலைமை கழகம் வரையறுத்ததின் அடிப்படையில் பொறுப்பு ஏற்று கலைஞரின் பெருமையை அவரின் தியாகத்தை அவரின் சாதனைகளை ஒன்றியமே உற்றுநோக்கும் வகையில் விழாக்களை நடத்திட உறுதி ஏற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தனியார்க்கு உதவிட, குலசேகரப் பட்டணத்தில்

புதிய விண்வெளித் தளம் உருவாக்கப்படுமா?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13 - தனியார் நிறுவனங்கள் சிறிய செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் செலுத்துவதற்கு தமிழ்நாட்டில் குலசேகரப்பட்டினத்தில் புதிய விண்வெளித் தளத்தை உருவாக்க ஒன்றிய அரசு முடிவு குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினர்

தனியார் நிறுவனங்கள் சிறிய செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் செலுத்துவதற்குப் பயன்படும் வகையில், தமிழ்நாட்டில் குலசேகரப்பட்டினத் தில் புதிய விண்வெளித் தளத்தை உருவாக்க ஒன்றிய அரசு முடிவு செய்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் விண்வெளி நிலையம் நிறுவப்படுவதற்கான கால அவகாசம் என்ன?

உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தை மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 14 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது உண்மையா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும்

உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தையின் பெரும்பகுதியைப் பயன்படுத்துவதற்கு ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அரசின் விண்வெளித்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

ஆமாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) இஸ்ரோவால் உருவாக்கப்பட்ட சிறிய செயற்கைக்கோள் ஏவுகணைகளை (எஸ்.எஸ்.எல்.வி) ஏவுவதற்காக தமிழ்நாட்

டின் குலசேகரப்பட்டினத்தில் புதிய விண்வெளி நிலையம் அமைப்பதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு வரம்பு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அரசு சாரா நிறுவனங்களால் (NGES) ஏவுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான (ஸ்பேஸ் போர்ட்) விண்வெளி நிலையம் அமையவுள்ளது.

தமிழக அரசின் நிலம் கையகப்படுத்தும் பணி நடந்து வருகிறது. தற்போது அடையாளம் காணப்பட்ட 2350 ஏக்கர் நிலத்தில் 2000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்ததும் புதிய தளத்தில் ஏவுதளம் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

எதிர்கால கணிப்புகள் உட்பட உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தையின் சரியான அளவு ஒரு சிக்கலான மிகவும் விவாதத்திற்குரிய விஷயமாகும் பல உலகளாவிய ஆலோசனை நிறுவனங்கள் பல்வேறு தற்போதைய மற்றும் வெவ்வேறு அடிப்படை அனுமானங்களில் எதிர்கால நிலையை கணிக்கின்றன.

இருப்பினும் இது போன்ற கணிப்புகள் சிறிய செயற்கைக்கோள் சந்தை வரும் ஆண்டுகளில் வளர்ச்சியடையும் என்ற பொதுவான போக்கைக் குறிக்கிறது.

உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தையைப் பொறுத்தவரை ஒன்றிய அரசு பல்வேறு முன்னேற்றங்களைத் தொடங்கியுள்ளது. சிறிய செயற்கைக்கோள் பயணத்தை செயல்படுத்தும் இந்திய சிறு விண்கலம் (IMS) மற்றும் இந்திய நானோ செயற்கைக்கோள் (INS) விண்கலங்களை ISRO வெற்றிகரமாக நிரூபித்துள்ளது IMS1 விண்கல தொழில்நுட்பம் NSIL வழியாக இந்திய பயன்பாட்டுக்கு மாற்றப் பட்டது.

மேலும் செலவு குறைந்த மற்றும் தேவைக்கேற்ப சிறிய செயற்கைக் கோள்களை ஏவுவதற்கான தேவையை பூர்த்தி செய்ய சிறிய செயற்கைக்கோள் ஏவுகணை வாகனத்தையும் (SSLV) இஸ்ரோ உருவாக்கியுள்ளது. INSPACE சமீபத்தில் இந்திய பயன்பாட்டுக்காக சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனத்தின் (SSLV) தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பாளர் - **பி.கே.நாகராஜ்** 8/418எ. ஸ்ரீராமர் கோயில் தெரு பாக்குபேட்டை (கி), போளிவாக்கம் (அ), திருவள்ளூர் மாவட்டம் - 602 002.

துணை அமைப்பாளர்கள் - த.தானியேல் 3/367, பெருமாள் கோயில் தெரு பழையனூர் கிராமம், திருத்தணி வட்டம் திருவள்ளூர் மாவட்டம் - 631 210.ஆர்.பாஸ்கரன் பிளாட் நெ..8, ராயல் இல்லம் முதல் மாடி எம்.டி.எம்.நகர், திருவள்ளூர் - 602 001.ஜெ.லூகா கனகாம்மா சத்திரம் சூளக்கரை தெரு திருவள்ளூர் மாவட்டம்.ஆர். முரளி வெளியகரம், பள்ளிப்பட்டு திருவள்ளூர் மாவட்டம்.எல். அறிவழகன் கீழ் நெடுங்கல் காலனிபேட்டை, கண்டிகை (அ), பள்ளிப்பட்டு (தா) திருவள்ளூர் மவாட்டம் - 631 208.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

தலைவர் - ஜி.நெடுஞ்செழியன் இடுத்தெரு, கீழ்மாவிலங்கை (கி) (ம) (அ)ஞ்சல் திண்டிவனம் (வ), விழுப்புரம் மாவட்டம்.

துணை தலைவர் - ஆர்.கன்னியப்பன் நெ.178, பாளையக்கார வீதி சிங்கனூர் கிராமம் (ம) அஞ்சல் திண்டிவனம் (வ), விழுப்புரம்.

அமைப்பாளர் - **பி.கோபிநாத்** நெ.64-125, செஞ்சி ரோடு திண்டிவனம் வட்டம் விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஜி.சுதாகரன் எண்.18, மேற்கு தெரு ராஜாம்புலியூர் கிராமம் குறிஞ்சிப்பை அஞ்சல் செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.கோ.அய்யனார் அவனம்பட்டு (கி), தென்பசார் அஞ்சல் திண்டிவனம் வட்டம் விழுப்புரம் மாவட்டம்.இரா.எழிலரசன் எண்.301, காலனி மேட்டுத் தெரு மொளசூர் கிராமம் ரூ அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம்.மு.பாலசுந்தரம் எண்.85, மாரியம்மன் கோவில் தெரு இடுக்குப்பம் கிராமம் மற்றும் அஞ்சல் மரக்காணம் வட்டம் விழுப்புரம் மாவட்டம்.ஜி.கமலக்கண்ணன் எண்.109-5, மெயின்ரோடு, கொள்ளார் கிராமம் மற்றும் அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் - 604 206.

விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - முருக்கம் கே.முனுசாமி, எம்.ஏ., பி.எட்., பி.எல்., மாரியம்மன் கோவில் தெரு முருக்கம் கிராமம் சேமங்கலம் அஞ்சல் வானூர் வட்டம், விழுப்புரம் - 605 109.

துணைத் தலைவர் - அ.சிவசெல்வம், நெ..2,என். ஜி.ஜி.ஓ.காலனி, சாலாமேடு, விழுப்புரம் மாவட்டம்

அமைப்பாளர் - **சுவை.சுரேஷ் (எ) முத்துக்குமார், பி.எஸ்.சி., பி.எல்.,** நெ..2, எல்லை சந்து, குமாரகுப்பம் வளவனூர், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஜெ.எழிலன், பி.ஏ.பி.எல்.. நெ.2/29ஏ, மாரியம்மன் கோவில் தெரு முட்டத்தூர், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம்.வி.விஸ்வநாதன், மாரியம்மன் கோவில் தெரு காவணிப்பாக்கம் திருப்பாச்சனூர் அஞ்சல் விழுப்புரம் வட்டம், விழுப்புரம்.எம்.காளிதாஸ், பி.ஏ.பி.எல்..நெ..100, ஜி.ஆர்.பி.தெரு, விழுப்புரம் மாவட்டம்.எச்.ராஜேஷ், எம்.ஏ., பி.எல்., நெ.1/114, வடக்கு தெரு கழுவாரம் மற்றும் அஞ்சல் திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம்.ஜி.கே.கார்த்திகேயன், பி.காம்., பி.எல்., நெ.13, அணைக்கட்டு சாலை ஜெயசக்தி நகர், திருவெண்ணைநல்லூர் (வ), விழுப்புரம்.

தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - அ.கமால் இளங்கோ 4-643, மெயின்ரோடு, ஊரணிபுரம் அஞ்சல்.ஒரத்தநாடு, பட்:டுக்கோட்டை (வ), தஞ்சாவூர் - - 614 614.

துணைத்தலைவர் - ஆர்.ஜெயவீரபாணடியன் 3-7, கண்டியன் தெரு, பட்டுக்கோட்டை , தஞ்சாவூர்- 614 601.

அமைப்பாளர் - **என்.ஆர்.அறிவழகன்** தெற்கு தெரு, அத்திவெட்டி, தாமரங்கோட்டை வழி, பட்டுக்கோட்டை (வ), தஞ்சாவூர்- 614 613.

துணை அமைப்பாளர்கள் - ஆர்.பி.மணிகண்டன் வேலுத்தேவர் காலனி பட்டுக்கோட்டை ரோடு, பேராவூரணி, தஞ்சாவூர் - 614 804. டி.கே.கோவிந்தராஜ் கண்டியன் தெரு பட்டுக்கோட்டை தஞ்சாவூர் - 614 601.அ.பழனிவேலுமேலத்தெரு, காசாங்காடு, தாமரங்கோட்டை வழி, பட்டுக்கோட்டை (வ), தஞ்சாவூர்-614613, ரெ.அனிதா ஹேமஸ்ரீபாவதி 236-54, சுண்ணாம்புகாரத் தெரு பட்டுக்கோட்டை தஞ்சாவூர் - 614 601.கே.சுந்தரமூர்த்தி 213,9வது தெரு, திரிபுரசுந்தரி நகர் தஞ்சாவூர் - 613 007.

தஞ்சாவூர் மத்திய மாவட்டம்

தலைவர் - என்.பூங்கோதை தொப்புள்பிள்ளையார் கோவில் சந்து தெற்கலங்கம் தஞ்சாவூர்.

துணைத்தலைவர் - சு.பாலகிருஷ்ணன் பாண்டியன்நகர் எம். சி.ரோடு, தஞ்சாவூர்.

அமைப்பாளர் - **மு.மணவழகன்** ஆம்பல்சாலை, பாப்பநாடு ஒரத்தநாடு.தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - எம்.பாலையன் ஜெ.பி.எல்.நகர், மருத்துவக்கல்லூரி சாலை தஞ்சாவூர்.ஆர்.அன்பழகன் அப்பாசாமி வாண்டையார் தெரு சீனிவாசபுரம் தஞ்சாவூர்.எ.துரைராஜ் தெற்கு தெரு, மின்னாத்தூர் தஞ்சாவூர்.அ.முருகேசன் கோனார் மேட்டுத் தெரு ஆவாரம்பட்டி பூதலூர், தஞ்சாவூர்.எஸ்.சாரதா 10வது தெரு, அண்ணாநகர், விளார்ரோடு தஞ்சாவூர்.

நாகப்பட்டினம் மாவட்டம்

தலைவர் - ரெ.சிங்காரவேலு 63, மேட்டுபங்கலா நாகபட்டினம்.

துணைத் தலைவர் - மா.மீ.அன்பரசு 9, நாகை ரோடு, வேதாரண்யம், நாகப்பட்டினம்.

அமைப்பாளர் - **மு.தினேஷ்குமார்** 121, சால்ட் ரோடு தோனித்துறை ரோடு நாகபட்டினம்.

துணை அமைப்பாளர்கள் - கே.ஆர்.சபாரெத்தினம் 12, .எஸ்.எம். காலனி முத்துமாரியம்மன் கோவில் தெரு தெற்கு வீதி, வெளிப்பாளையம் நாகபட்டினம் க.செந்தில் 2, பெபினா ரெசிடென்சி காடம்பாடி நாகபட்டினம்.ஜெ.விஜயகமலன் 24, சிவன் சன்னதி வெளிப்பாளையம் நாகபட்டினம் எல்.பாஸ்கர் 1/160/8, இந்தியன் நகர் புரவாச்சேரி மெயின்ரோடு சிக்கல், நாகப்பட்டினம்.கே.வினோத் 3, சேவை மாரியம்மன் கோவில் தெரு செல்லூர், நாகப்பட்டினம்.

மதுரை வடக்கு மாவட்டம்

தலைவர் - கே.கோகுல்நாத், பி.பி.ஏ., பி.எல்., 7-1-82, நாட்டாண்மைகார தெரு மேட்டு நீரேத்தான் டி.வாடிப்பட்டி.மதுரை.

துணைத்தலைவர் - சே.புகழேந்தி, பி.ஏ., எல்.எல்.பி., ஏ.பி-மலையாண்டிபுரம் ய.கொடிக்குளம் அஞ்சல் மதுரை

அமைப்பாளர் - **எம்.கலாநிதி, எம்.ஏ., பி.எல்.,** 1-116 கிழக்கு தெரு, காளிகாப்பன், திருமோகூர் அஞ்சல் மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - வி.எஸ்.கிஷோர் குமார், பி.இ.எல். எல்.பி., 6-108 மேலநாச்சிகுளம் வாடிப்பட்டி, மதுரை.எம்.முகமது அசன், பி.ஏ.,பி.எல்., 2-22 பள்ளிவாசல் 2வது தெரு திருப்பாலை, மதுரை.ரா.சந்திர சேகர், பி.ஏ., பி.எல்., 5-73 கிழக்கு தெரு வண்டியூர், மதுரை.சி.தாமோதரக் கண்ணன், எம்.ஏ., பி.எல்., 2-21 திலகர் தெரு, திருமால்புரம் அஞ்சல் செட்டிக்குளம், மதுரை.கோ. இராஜேஷ், பி.காம்.,எல்.எல்.பி., 3-17 தேத்தாங்குளம் அரும்பனூர், செட்டிக்குளம் மதுரை.

தேனி தெற்கு மாவட்டம்

தலைவர் - கே.ராஜேந்திரன், பி.எஸ்.சி., பி.எல்., 6-340பி, இந்திரா நகர் உத்தமபாளையம் தேனி மாவட்டம்

துணைத்தலைவர் - பி.தமயந்தி, பி.ஏ., பி.எல்., வா-4, எண்.77, கீழரத வீதி கோம்பை,தேனி மாவட்டம்.

அமைப்பாளர் - **இரா.தனுஷ்கோடி, பி,ஏ., பி.எல்.,** 13-3-6, காந்திஜி வாசக சாலை தெரு வெள்ளையாம்மள்புரம் தேனி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - எம்.கே.ஈஸ்வரன், எம்.ஏ.பி.எல்., டபிள்யு-15, கோசேந்திர ஓடை க.புதுப்பட்டி, தேனி மாவட்டம் எம். ராஜ்குமார், பி.இ., எல்.எல்.பி., 89/4, கள்ளர் பள்ளி தெரு, நாராயணத்தேவன்பட்டி தேனி மவாட்டம் டி.இராஜேஸ்வரன், பி.பி.ஏ., பி.எல்., 588, வடக்குத் தெரு அம்மச்சியாபுரம், ஆண்டிபட்டி, தேனி மாவட்டம் கே.சரவணகுமார்,பி.ஏ., எல்.எல்.பி., தெற்கு தெரு, கொப்பையம்பட்டி மொட்டனூத்து அஞ்சல், ஆண்டிபட்டி தாலுக்கா தேனி மாவட்டம் ஜெ.செல்லப்பாண்டி, பி.ஏ., பி.எல்., 18/பி/1, வீரணத்தேவர் சந்து கூடலூர், தேனி மாவட்டம்

தருமபுரி மேற்கு மாவட்டம்

தலைவர் - தீ.முனிராஜ் அரூர் மெயின்ரோடு, கடத்தூர்; (அ) பாப்பிரெட்டிப்பட்டி (வ) தருமபுரி - 635 303

துணைத் தலைவர் - மா.சக்திவேல் மருக்காலம்பட்டி.அலாபுரம் அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி (வ) தருமபுரி - 636 904

அமைப்பாளர் - **தொ.சந்திரசேகரன் 5-420,** மந்திரிகவுண்டர் தெரு பாலக்கோடு தருமபுரி - 636 808

துணை அமைப்பாளர்கள் - பொ.முரளிதரன் 156, கருங்கல்பட்டி சாலை அலமேலுபுரம் (கி) பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் - 636 905 எம்.இளங்கோ வீரப்பநாயக்கன்பட்டி (கி) மற்றும் (அ), அரூர் வட்டம் தருமபுரி மாவட்டம் - 636 808 மு.வீரமணி லாலாக்கொட்டாய் சோலைக்கொட்டாய் அஞ்சல் தருமபுரி மாவட்டம் - 636 704 பெ.தருமன் நாயக்கன்கொட்டாய் (கி) மற்றும் (அ), தருமபுரி வட்டம் - 636 808.ஏ.ரவீந்திரன் 1/77இ ஜி.பி. எஸ், காம்ப்லெக்ஸ் தருமபுரி மெயின்ரோடு, தபால்நிலையம் அருகில், பொ.மல்லாபுரம் பாப்பிரெட்டிபட்டி (வ), தருமபுரி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 12-08-2023

என்.ஆர்.இளங்கோ
செயலாளர்
தி.மு.க. வழக்கறிஞர் அணி

தர்மபுரி மேற்கு மாவட்டம் ஒன்றிய, பேரூர் வாக்குச்சாவடி முகவர்களுக்கான(BLA2) ஆய்வுக் கூட்டங்கள்!

தருமபுரி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் அறிவிப்பு!

நாள் 16.08.2023, புதன்
காலை 9.00 மணி
தர்மபுரி கிழக்குஒன்றியம்
பூத் எண்ணிக்கை 55
இடம் - தர்மபுரி கிழக்கு ஒன்றிய அலுவலகம்.

காலை 11.00
பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை44
பொ.மல்லாபுரம் பேரூராட்சி
பூத் எண்ணிக்கை 12
இடம் - அண்ணா திருமண மண்டபம்
பி.பள்ளிப்பட்டி

மாலை 3.00மணி
மொரப்பூர் மேற்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 34.
கம்பைநல்லூர் பேரூராட்சி
பூத் எண்ணிக்கை 11
இடம் - சமுதாயக்கூடம் கம்பைநல்லூர்

****

நாள் 17.08.2023, வியாழன்
காலை 9.00 மணி
அரூர் மேற்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை= 52
இடம் : கொங்கு திருமண மண்டபம், கோபிநாதம் பட்டி கூட்ரோடு.

காலை 11 மணி
அரூர் கிழக்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 75
இடம் - கொங்கு வெள்ளாளக் கவுண்டர் திருமண மண்டபம்,தீர்த்தமலை.

பிற்பகல் 2.00மணி
அரூர் வடக்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 45
அரூர் பேரூராட்சி
பூத் எண்ணிக்கை 26
இடம் : பொன் கற்பக திருமண மண்டபம், அரூர்.

****

நாள் 18.08.2023, வெள்ளி
காலை 9.00 மணி
கடத்தூர் மேற்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 45
கடத்தூர் பேரூராட்சி
பூத் எண்ணிக்கை10
இடம் - M.C.S திருமண மண்டபம், கடத்தூர்.

பிற்பகல் 11.00மணி
தர்மபுரி வடக்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை47
தர்மபுரி மேற்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 12
இடம் - சமுதாயக்கூடம் A.நடுப்பட்டி

****

நாள் 24.08.2023 வியாழன்
காலை 9.00மணி
பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 59
பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி
பூத் எண்ணிக்கை9
இடம் : நரசுஸ் திருமண மண்டபம், பாப்பிரெட்டிப்பட்டி.
காலை 11.00 மணி
கடத்தூர் கிழக்கு ஒன்றியம் பூத் எண்ணிக்கை 40
இடம் : சமுதாயக்கூடம் கர்த்தானூர்

பிற்பகல் 2.00 மணி .
மொரப்பூர் கிழக்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 34
இடம் :இந்து சமய அறநிலைத்துறை மண்டபம், மொரப்பூர்.

****

நாள்25.08.2023 வெள்ளி
காலை 9.00 மணி
காரிமங்கலம் மத்திய ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 27
காரிமங்கலம் பேரூராட்சி
பூத் எண்ணிக்கை 12
இடம் : மாவட்ட கழக அலுவலகம், காரிமங்கலம்

காலை 11:00 மணி
காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 36
இடம் : மாவட்ட கழக அலுவலகம், காரிமங்கலம்.

பிற்பகல் 2.00 மணி
காரிமங்கலம் மேற்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 54
இடம் : மாவட்ட கழக அலுவலகம், காரிமங்கலம்.

****

நாள்26.08.2023 - சனி
காலை 9 மணி. பாலக்கோடு மேற்கு ஒன்றியம்
பூத் எண்ணிக்கை49
மாரண்டஅள்ளி பேரூராட்சி
பூத் எண்ணிக்கை8
இடம் : சபரி மஹால், மாரண்டஅள்ளி

காலை 11:00 மணி
பாலக்கோடு மத்திய ஒன்றியம்
பூத் எண்ணிக்கை 70
பாலக்கோடு பேரூராட்சி பூத் எண்ணிக்கை 16
இடம் வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், பாலக்கோடு

மேற்கண்ட அட்டவணைப்படி ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பி.பழனியப்பன்
செயலாளர்
தர்மபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.